பிரஸார் பாரதி
<u>இந்திய வானொலி, சென்னை-4</u>

24 05 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலில் நாளை நடைபெறவுள்ள ஆறாவது கட்ட வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
2. முல்லைப்பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணைக்கட்ட கேரள அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்றும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
3. வடக்கு ஆஸ்திரேலியாவின் பப்புவா – நியூகினியா தீவில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
4. வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.,
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைக்கு ஆறாவது கட்டமாக நாளை நடைபெறவுள்ள வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஐந்து மணி வரை நடைபெறவுள்ளது.

ஆறு மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் நாளை தேர்தல் நடைபெறுகிறது.

வெய்யிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு குடிநீர், நிழற்குடை அமைத்தல் உள்ளிட்டவற்றை உறுதி செய்யுமாறு தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தந்த மாநில காவல்துறையினருடன் துணை ராணுவப் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் கேமரா மூலம் கண்காணிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அனைத்து கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எட்டு மாநிலங்களில் இடம்பெற்றுள்ள 57 தொகுதிகளில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் நான்காம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக நடைபெற்று வரும் இந்த தேர்தலில் இதுவரை 428 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் இரண்டு லட்சம் பேருக்கு விரைவில் புதிய ரேஷன் அட்டைகள் வழங்கப்படும் என்று மாநில உணவுப் பொருள் வழங்கல்துறை தெரிவித்துள்ளது.

புதிதாக குடும்ப அட்டை கேட்டு இரண்டு லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இரண்டு கோடியே 24 லட்சம் அட்டைகள் பயன்பாட்டில் இருப்பதாக உணவுப்பொருள் வழங்கல் துறை கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக முல்லைப்பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்டுவதற்கு கேரள அரசு மேற்கொள்ளும் முயற்சியை தமிழக முதலமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2014-ஆம் ஆண்டு மே மாதம் ஏழாம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தமிழக அரசு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்வதற்கும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் செய்யும் பணிகளை கேரள அரசு எக்காரணம் கொண்டும் தடுத்து நிறுத்தக்கூடாது எனவும் கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக அரசு சார்பில் பேபி அணை மற்றும் அணைப்பகுதிகளை பலப்படுத்துவதற்கான பணிகளை இன்னும் முடிவடையாத நிலையில், கேரள அரசு புதிய முயற்சியில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை கேரள அரசு பின்பற்ற வலியுறுத்த வேண்டுமென்றும், தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், முல்லைப்பெரியாறு அணை உறுதியாக இருப்பதால் புதிய அணை கட்டத் தேவையில்லை என்றும், இந்த அணை பலமாகவும், பாதுகாப்பாகவும் உள்ளது என நீதிபதி திரு ஏ எஸ் ஆனந்த் தலைமையிலான ஐவர் குழு தெளிவாகக் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விஷயத்தில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, கேரள அரசு பின்பற்ற வேண்டுமென்றும், இந்த தீர்ப்புக்கு எதிராக செயல்பட்டால் அதனை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

எல் டி டி இ அமைப்புக்கு மத்திய அரசு இம்மாதம் 14-ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டுகளுக்கு விதித்துள்ள தடையை தமிழக அரசும் உறுதி செய்து அரசிதழில் வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இம்மாதம் 18-ஆம் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு எல் டி டி இ அமைப்பு சட்ட விரோத அமைப்பாக அறிவிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேலும் வலவடைந்து நாளை புயலாக உருவாக வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

காற்றழுத்த தாழ்வுமண்டலம் காரணமாக நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

*(வாய்ஸ்பைட் - லஷ்மணன் /செஜெ ) --- 54 செகண்ட்*

இதனிடையே நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமுதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த கனமழை காரணமாக, நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஆறு அடியும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் எட்டு அடியும் உயர்ந்துள்ளது.

**[]<<<>>>[]**

மத்திய அரசின் டென்சிங் நார்கே-2023 தேசிய சாகச விருதுக்கு சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த்த ஜகடே தெரிவித்துள்ளார்.

வீரதீர செயல் புரிந்தவர்கள் மற்றும் பேரிடர் காலங்களில் பல உயிர்களை காப்பாற்றியவர்கள், ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் சாகசம் புரிந்தவர்கள், மலையேற்றம், நீச்சல் மற்றும் விமான சாகசம் புரிந்தவர்கள் இந்த விருதுக்காக விண்ணப்பிக்கலாம்.

15 லட்சம் ரூபாய் ரொக்கத்துடன் வெண்கல சிலை, சான்றிதழ், சில்க்-டை கொண்ட ப்ளேசர் ஆகியவை வழங்கப்படும்.

டென்சிங் நார்கே தேசிய சாசச விருதுக்கு இம்மாதம் 31-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று சென்னை மாவட்ட ஆட்சியரின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம். குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 64-வது பழக்கண்காட்சியை ஆட்சியர் திருமதி அருணா இன்று தொடங்கி வைத்தார்.

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் ஐந்தரை டன் பழங்களைக் கொண்டு பல்வேறு உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) --- 39 செகண்ட்*

**[]<<<>>>[]**

வடக்கு ஆஸ்திரேலியாவின் பப்புவா – நியூகினியா தீவு பகுதியில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த தகவலை தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய வானொலி எங்கா மாகாணத்தில் உள்ள **Kaokalam** மஎன்ற கிராமப்பகுதியில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாக தெரிவித்தது.

உயிரிழந்தோர் எண்ணிக்கை முற்றிலுமாக உறுதி செய்யப்படவில்லை என்றும், உயிரிழப்பு கூடுதலாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

பப்புவா-நியூனியாவில் பத்து மில்லியனுக்கும் மேற்பட்ட விளிம்பு நிலையில் உள்ள விவசாயிகள் வசித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

மியான்மரிலிருந்து வரும் ரோஹிங்கியா அகதிகளுக்காக மீண்டும் எல்லையை திறக்குமாறு பங்களாதேஷ் அரசை, ஐ நா கேட்டுக்கொண்டுள்ளது.

மியான்மரில் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் பங்காளதேஷ் நாடு தங்களுக்கு புகலிடமாக இருக்கும் என்று நம்புவதால் அந்நாட்டிற்கு செல்வதாக ஐ நா தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

இதில் வெற்றிபெறும் அணி நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணியை எதிர்கொள்ளும்.

**[]<<<>>>[]**

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பி வி சிந்து அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கோலாம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-13, 14-21, 21-12 என்ற செட் கணக்கில் – சீனாவின் **Yue Han** –யுவென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் **Ashmita Chaliha** –தோல்வியடைந்தார்.

**[]<<<>>>[]**

ஜமைக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் அரை இறுதிக்கு இந்தியாவின் ஆர்யன்ஷா – அமெரிக்காவின் ஆதித்யா கணேசன் இணை முன்னேறியுள்ளது.

***End of News***